REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK
2020 நவம்பர் 24 செவ்வாய்க்கிழமை
# தினகரன்
THINAKARAN தினகரன்
வரு. 88 இல. 279 | November 24, Tuesday, 2020 | 20பக்கங்கள் | 30/-




### சுகாதார வழிகாட்டல்களை முறையாக பின்பற்றி

# பாடசாலைகள் மீண்டும் நேற்று ஆரம்பமானது





**மாணவர் வருகையில் சிறு வீழ்ச்சி எனினும் எதிர்பார்ப்பு வெற்றி**

மேல் மாகாணம் மற்றும் தனிமைப்படுத் தப்பட்டுள்ள பகுதிகளை பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் 13 வரையி லான மாணவர்களுக்கான






ஸ்ரீ சத்ய சாயி பகவானின் 95 ஆவது ஜனன தின நிகழ்வுகள் நேற்று கொழும்பு புதுச் செட்டித் தெருவில் அமைந்துள்ள சாயி நிலையத்தில் அரச சுகாதார வழிகாட்டலுக்கி ணங்க அனுஷ்டிக்கப்பட்டது. சாயி மத்திய நிலையத் தலைவர் எஸ்.என்.உதயநாயகன் பிரசாந்தி கொடியேற்றுவதை படத்தில் காணலாம். படம்: எஸ்.உதயகுமார்

### தமிழகத்தில் சிக்கியுள்ள இலங்கையரை

## நாட்டுக்கு அழைத்துவர அமைச்சர் டக்ளஸ் ஏற்பாடு



கொவிட் 19 காரணமாக நாடு திரும்ப முடியாமல் தமிழகத்தில் சிக்கியிருப்போரை அழைத்து வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவித்துள்ளார். அத்துடன் நாடு திரும்ப விரும்புகின்றவர்கள் தொடர்பான விபரங்களை அறியத் தருமாறும் அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பல்வேறு தேவைகள் நிமித்தம், இந்தியாவிற்கு – குறிப்பாக தமிழகத்திற்கு சென்றிருந்த நிலையில் கொவிட் 19 காரணமாக ஏற்பட்ட 06

### பொ...

## சீ.டி... நியமனத்துக்கு அனுமதி



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் பொலிஸ் மாஅதிபராக பரிந்துரை செய்யப்பட்டிருந்த பதில் பொலிஸ் மாஅதிபர் சீ.டி. விக்ரமரத்னவை நியமிக்க பாராளுமன்ற தெரிவு குழு அனுமதி வழங்கியுள்ளது.

### ...க்கு அடிமையான

## ...ா நோயாளருக்கு தனியான சிகிச்சை நிலையம்

**பலரும் தப்பியோட முயற்சிப்பதால் பாதுகாப்பு ஏற்பாடு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகளாகவுள்ள போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக விசேட பாதுகாப்புடன் கூடிய சிகிச்சை நிலையமொன்றை நிறுவுவதற்கு தீர்மானித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று நோய்க்காக சிகிச்சை பெற்று வரும் போதைப்பொருளுக்கு அடிமையான பலர் இக்காலங்களில் அங்கிருந்து தப்பிச் செல்வதற்கு முயற்சித்துள்ளதாக குறிப்பிட்ட அவர், இதனைத் தொடர்ந்தே இந்த தீர்மானத்தை எடுத்ததாக தெரிவித்துள்ளார். கடந்த சில தினங்களுக்கு முன்பதாக 06



### கொரோனாவால் உயிரிழந்த உறவினரை

## அடக்கம் செய்ய ஒருபோதும் அழுத்தம் கொடுக்கவில்லை

**நிரூபித்தால் பதவியை இராஜினாமா செய்வதாக சூளுரை**

**ஷம்ஸ் பாஹிம்,
சுப்ரமணியம் நிசாந்தன்**

கொரோனா தொற்றிய தனது உறவினர் ஒருவரை புதைப்பதற்கு அழுத்தம் கொடுத்ததாக ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஹேசா விதாரன தெரிவித்த குற்றச்சாட்டை முழுமையாக நிராகரித்த நீதி அமைச்சர் அலிசப்ரி, நான் அழுத்தம் கொடுப்பதற்காக யாருக்காவது தொலைபேசி அழைப்பு கொடுத்ததாக நிரூபித்தால் இந்த நிமிடமே அமைச்சு பதவியையும் எம்.பி பதவியையும் இராஜினாமா செய்வதாகவும் அவர் குறிப்பிட்டார். கொரோனா தொற்றினால் இறக்கும் ஏனையவர்கள் தகனம் செய்யப்படுகையில் 06



## தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண ஒன்றுபட்டு செயற்பட சம்பந்தனுக்கு அழைப்பு

**இருகரம் கூப்பி அழைப்பதாக வியாழேந்திரன் பகிரங்கமாக தெரிவிப்பு**





தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஒன்றாக இணைந்து பேசுவதற்கு, சம்பந்தன் உள்ளிட்ட அத்தனை பாராளுமன்ற உறுப்பினர்களையும் இரு கரம் கூப்பி அழைக்கிறேன் வாருங்கள் என இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் பிரிவில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் மேலும் கூறியதாவது, தற்போது புதிய வடிவம் வந்துள்ளது. பாராளுமன்றில் எதிர்க்கட்சியில் இருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர், வியாழேந்திரனைப் பாருங்கள் என்றும் வடக்கிலே அங்கஜனைப் 06

### பசில் ராஜபக்ஷ வெளிநாடு

## செல்ல விதிக்கப்பட்ட தடை நேற்று முதல் நீக்கம்



முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவிற்கு வெளிநாடு செல்ல விதிக்கப்பட்டிருந்த தடையை கொழும்பு மேல் நீதிமன்றம் நீக்கியுள்ளது.

2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தல் காலத்தில் அரச நிதி முறைகேடாக பயன்படுத்தப்பட்ட விவகாரம் தொடர்பில், முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவிற்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் திவிநெகும திட்டத்தின் 06

## கனடிய உயர் விருதை பெற்ற இலங்கைத் தமிழர்

**வாழ்த்தும் பாராட்டும் குவிகிறது**



கனடிய பாதுகாப்புப் படையில் 22 ஆண்டுகள் நற்பணி ஆற்றிய மைக்காக, கனேடிய பாதுகாப்புப்

## கொழும்பிலிருந்து ஏனைய பகுதிகளுக்கு செல்வது நிலைமையை மேலும் சிக்கலாக்கும்

**சுகாதாரத் துறை துணை பணிப்பாளர் டாக்டர் ஹேமந்த எச்சரிக்கை**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மட்டுமேயாகும். கொழும்பிலிருந்து மற்ற பகுதிகளுக்கு

## இலங்கைக்கு கிழக்கே உருவான தாழமுக்கம் 'நிவர்' புயலாகிறது

**கடும் மழை; கிழக்கில் கடும் காற்று; நாளை சென்னை கரைக்கு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



## UNP தேசியப் பட்டியல் எம்.பியாகிறார் ரணில்

**நீண்ட இழுபறியின் பின் கட்சி தீர்மானம்**

ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைத்த தேசிய பட்டியல்

